## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 117/2019

Deposition of **PW.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 10.07.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ரங்கநாதன் Father's Name : பெரியசாமி உடையார்

துவக்க நேரம்: 04.49 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) 2-ம் வாதி எனது பெரியப்பா மகள் என்றால் சரிதான். 2-ம் வாதி அழைத்தன்பேரில்தான் வழக்கிற்காக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுடன் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. பேசிக்கொண்டுதான் உள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ச.எண்.334/7 ஆகும்.

2) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முதல் நிலை சாட்சியத்தில் சொல்லியுள்ள சர்வே எண்களின் விஸ்தீரணம் பற்றிய விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதிகள் நடப்பதை தடுத்ததாக கூறியுள்ள நிலையில் எந்த தேதியில் அவ்வாறு தடுத்தார்கள் என்றால் தேதி நியாபகம் இல்லை, ஆனால் நிறைய நாட்கள் அவ்வாறு தடுத்தார்கள்.

3) ச.எண்.334/7-ல் உள்ள நிலம் என்ன வகையானது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தினுடைய நான்கு எல்லைகள் பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல்

செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பிரதிவாதிகள் தடத்தை மறிப்பதாக சொல்லி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

4) பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன விவரங்கள்கூறி பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்திற்கும், என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 2 கி.மீ இருக்கும்.

5) நான் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள விடுதலைப்பத்திரம் எந்த தேதியில், எந்த ஆவண எண்ணில் பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியவில்லை. மேற்படி விடுதலைப்பத்திரத்தில் சொல்லியுள்ள சொத்து விவரத்தைப்பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி எனது அப்பா ஏற்படுத்திய விடுதலைப்பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் எனது அப்பா சொல்லிதான் தெரியும். மேற்படி விடுதலைப்பத்திரத்தை வாதி என்னிடம் காட்டியுள்ளாரா என்றால் இல்லை.

6) வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே எத்தனை வழக்குகள் நிலுவையில் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள ச.எண்.334/3-ல் உள்ள சொத்தின் மூல ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ச.எண்.334/3-ற்கான வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

7) தாவா சொத்தில் ச.எண்.334/3 என்ற சொத்தும், சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். ச.எண்.334/3 என்ற சொத்து எனது மூதாதையர் அனுபவித்தில் இருந்ததா என்றால் ஆமாம். அதற்கான ஆவணங்களை நான் வாதியிடம்

ஒப்படைத்தேனா என்றால் இல்லை, எனது அப்பாவிடம் உள்ளது. ச.எண்.334/3-ஐ பொறுத்து வாதிகள், பிரதிவாதிகள் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்ற விவரமும், இதே சர்வே எண்ணிற்கு வேறு வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

8) ச.எண்.334/3-ன் மேற்கில் உள்ள இடத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்ததற்கான ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ச.எண்.334/3 -ற்குண்டான 1 ஏக்கர் 78 செண்ட் இடத்திற்கு 1-ம் பிரதிவாதி தகப்பனார் நல்லமுத்து உடையார் பெயருக்கு டி கார்டு வழங்கப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நல்லமுத்து உடையார் இறந்தபிறகு ச.எண்.334/3-ல் உள்ளசொத்தை 1-ம் பிரதிவாதியும், அவரது வாரிசுகளும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, வாதிகள்தான் அனுபவம் செய்து வந்தார்கள், ஆனால் வழக்கிற்கு பின்னிட்டு தற்பொழுது பயிர் செய்யாமல் உள்ளது. மேற்படி சர்வே எண்ணின் விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியாது.

9) தாவா சொத்தானா ச.எண்.334/7 தரிசு நிலம் என்றால் சரிதான். வாதி, பிரதிவாதிகள் இருவரும் மேற்படி தரிசு நிலம் வழியாகதான் அவரவர் நிலத்திற்கு சென்று வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தானது தரிசு நிலம் என்பதால் பிரதிவாதிகள், வாதிகளை தடுப்பதற்கான சூழ்நிலையையே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தடுத்ததால்தான் வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

10) ச.எண்.334/3-ற்கு மேற்கே உள்ள நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் பிரதிவாதிகளை மிரட்ட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் வாதிகள் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் அதற்கு அனுசரணையாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பற்றி எந்த

விவரமும் எனக்கு தெரியாது என்றாலும் வாதி கூறியவாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

முடிவு நேரம்: 05.19 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

sd/-D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.117/2019, Dt.10.07.2025.